# விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
# இலங்கை கோள் மண்டலம்

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் இருக்கும் இலங்கை கோள் மண்டலத்தில் வெற்றிடம் உள்ள மேற்பார்வை முகாமைத்துவ உதவி – தொழில்நுட்ப சேவை தரத்தின் (MN 3-2016) உதவி கோள் மண்டல தொழில்நுட்ப நிபுணர் பதவிக்காக தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி: உதவி கோள் மண்டல தொழில்நுட்ப நிபுணர் III தரம்
(மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவைத் தரம் MN 3-2025 -2016)

02. சம்பள அளவு: ரூபா 52,250 – 10 x 800– 11 x 1190 – 10 x 1320 – 10 x 1350 – 100,040 /-
(க.கொ. 10/2025 ஆம் இலக்க 2026.12.31 வரை அரச நிர்வாக சுற்றுநிருபத்தின் அட்டவணைப்படி கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.)

03. வயது: 18 இற்கும் - 30 இற்கும் இடையே இருத்தல் வேண்டும்.

04. கல்வித் தகைமை: துறைக்கு தொடர்புடைய இரு பாடங்களுடன் விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பவியல் துறை சார்ந்த மூன்று பாடங்களில் க.பொ.த. (உ.தர) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

(a) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**தொழில்முறை தகைமைகள்**

(i) மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா,

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

(iv) மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் இரண்டு ஆண்டு விவசாய டிப்ளோமா

அல்லது

(v) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(vi) இலங்கை பொறியியல் நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும் பொறியியல் பரீட்சை 1ஆவது பாகத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(vii) தொழில் துறைக்கு தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 06 தரத்தின் தகைமையை பூர்த்தி செய்தல்.

அல்லது

(viii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேல் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழை வழங்கும் நிறுவனங்களினால் கேட்டு கருத்துகளை பெற்ற பின் மேல் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் நிகரானது என மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி அதிகாரசபையினால் ஏற்கப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல்.

05. அனுபவம்:- விசேட தகைமைகளாகக் கருதப்படும்.

06. உடல் தகைமை:- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு முடியுமான வகையில் சிறந்த உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல்.

07. வேறு:-

(a) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(b) விண்ணப்பதாரர்கள் சிறந்த பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(c) எந்த ஒரு சமயத்திலும் துறவரத்தில் உள்ள எந்த ஒருவரும் இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை அற்றவர்களாவர்.

(d) பதவிக்கு இணைப்பதற்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்தல் வேண்டும் என விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு தகைமைகளை அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

08. வெற்றிடங்கள் எண்ணிக்கை இரண்டாகும் (02)

09. ஆட்சேர்ப்பு முறை:- தகுதியை பூர்த்தி செய்கின்றவர்கள் எழுத்துமூல பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தேர்வு செய்யப்படும்.

(a) எழுத்துப் பரீட்சை

| பாடம் | அதிகபட்ச புள்ளி அளவு | பெறக்கூடிய சராசரிப்புள்ளி |
|---|---|---|
| நுண்ணறிவு பரீட்சை | 100% | 40% |
| துறைசார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | 100% | 40% |

(b) சாதாரண நேர்முகப் பரீட்சை
புள்ளி வழங்கப்படாது என்பதோடு, தகுதி சோதிக்கப்படும்.

தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிபரத்துடன் விண்ணப்பங்களை 2026.05.31 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உதவி கோள் மண்டல தொழில்நுட்ப நிபுணர் III தரம் என குறிப்பிடுதல் வேண்டும். இந்தப் பதவிகளுக்கு தொடர்புடைய ஆட்சேர்ப்பு நடைமுறை அமைச்சின் www.most.gov.lk என்ற இணையதளத்தில் பார்க்க முடியும்.

**செயலாளர்,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு,**
**3ஆவது மாடி,**
**செத்சிறிபாய – 1 ஆவது கட்டம்,**
**பத்தரமுல்லை.**